22nd November 1963]

படுகிற இலை, புகையிலைபோன்ற (ரா-மெட்டீரியல்ஸ்) மூலப்பொருள்கள் இந்தியாவிலிருந்துதான் கூடுதலாக அனுப்பப்படுகிறது. ஆகவே இந்த மூலப்பொருள்களை தடுக்கவேண்டும் என்று மத்திய அரசாங்கத்திற்கு இந்த அரசாங்கம் சிபாரிசு செய்யுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: நம்முடைய சட்டசபை விதிகளின்படி இந்த ராஜ்யத்திற்கு சம்பந்தப்பட்ட அல்லது இந்த அரசாங்கத்தின் அதிகாரத்தின்கீழ் உள்ள நடவடிக்கைகளைப்பற்றி இந்த சட்டசபையில் கேள்விகளை கேட்கமுடியும். இப்போது கேட்டிருக்கும் கேள்வி மத்திய அரசாங்கத்தின்கீழ் இருப்பது. ஆகவே இக்கேள்வியை பார்லிமெண்டில்தான் போடவேண்டும்.

திரு. கே. டி. கோசல்ராம்: இந்த அரசாங்கம் சிபாரிசு செய்யுமா என்றுதான் கேட்கிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: ஒரு அரசாங்கம் மற்றொரு அரசாங்கத்திற்கு இதுபோன்ற காரியங்களில் சிபாரிசு செய்வது என்பது வழக்கமல்ல. (திரு. கே. டி. கோசல்ராம் அவர்கள் எழுந்திருந்தார்.)

Diploma Course in Law

*473 Q.—SRI K. MOOKIAH THEVAR: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) the number of persons who sought admission for the Diploma Course in Law this year; and

(b) the number of persons admitted?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) 421.

(b) 240.

திரு. கே. மூக்கையா தேவர்: இந்த டிப்ளமோ-கோர்ஸ் ஏற்படுத்தியிருப்பதின் நோக்கமென்ன?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: நாம் பொதுவாக பொருளாதார வளர்ச்சி அடைந்து கொண்டிருக்கிறோம். அதனால் வழக்குகள் எல்லாம் பல துறைகளில் பெருகிக்கொண்டிருக்கின்றன. வழக்கறிஞர்கள் பல துறைகளில் குறிப்பிட்ட அளவில் விசேஷமாக நிபுணர்களாக வரவேண்டும், அதற்கு இந்த கோர்ஸ் பயன்படும். முக்கியமாக கம்பெனி லா, பாங்கிங் லா, இன்ஷூரன்ஸ் லா, டாக்சேஷன் லா, லேபர் லா, அட்மினிஸ்ட்ரேஷன் லா, இம்மாதிரியான சட்டங்களில் எல்லாம் புதிதாக பட்டம் பெறுகிறவர்கள் போதிய அளவு படித்திருக்கமாட்டார்கள். இதைப்பற்றி, விசேஷமாக ஒவ்வொரு துறையைப் பற்றியும் இந்த கோர்ஸ் மூலம் தெரிந்து கொள்ள முடியும். இந்த கோர்ஸில் சேர்ந்து படிப்பதினால் ஒரு குறிப்பிட்ட தொழிலில் ஈடுபடுவதற்கு வாய்ப்பு ஏற்படும். ஆகவேதான் இதற்கான தனிக் கோர்ஸ் ஒன்று சட்டக் கல்லூரியில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

[22nd November 1963

திரு. ஆ. கு. சுப்பையா : இதில் சேர்ந்துள்ள ஆண்கள் எத்தனை பேர்கள்? பெண்கள் எத்தனை பேர்கள்?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அந்த விவரம் இப்போது என்னிடமில்லை.

பிரசவ விடுமுறை (மருத்துவ அத்தாட்சி)

* 474 **கேள்வி.—திரு. முனு ஆதி :** கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அரசாங்க அலுவலகங்களில் பணி புரியும் மணமான பெண்களும், ஆசிரியைகளும் பிரசவத்திற்கான விடுமுறையில் செல்லும்போதும், பின்னர் வேலையில் மீண்டும் சேரும்போதும் மருத்துவ அத்தாட்சி கேட்கப்படுகிறதா?

(இ) ஆமெனில், அவ்வாறு வற்புறுத்தப்படுவதன் அவசிய மென்ன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) No, Sir.

(b) The question does not arise.

திரு. முனு ஆதி : இப்படியில்லை என்று சர்க்கார் சொன்ன போதிலும், இதன் காரணமாக சம்பளம் கிடைப்பதில் தாமதம் ஏற்படுகிறது என்பதை சர்க்கார் அறியுமா? ஆகவே பிரசவத்திற் காக மருத்துவ சர்டிபிகேட் தேவையில்லை என்பதை சர்க்கார் உணருகிறதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பிரசவத்திற்காக போகின்றவர் களுக்கு சர்டிபிகேட் அவசியமில்லை.

கலைக்கல்லூரி (அரியலூர்)

* 475 **கேள்வி.—திரு. இரா. நாராயணன் :** கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) திருச்சி மாவட்டம் அரியலூரில் ஒரு கலைக் கல்லூரியை நிறுவ உத்தேசமுண்டா?

(இ) ஆமெனில், எப்போது ஆரம்பிக்கப்படும்?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) No.

(b) Does not arise.

திரு. இரா. நாராயணன் : ஸார், அரியலூர் வட்டாரத்தில் சுற்றி யுள்ள இடங்களில் எல்லாம் 40 உயர்நிலைப்பள்ளிகள் இருக்கின்றன. ஆகவே சர்க்கார் அங்கு ஒரு கலைக்கல்லூரியை ஏற்படுத்து வதற்கு உத்தேசிக்குமா? இல்லையென்றால் இனிமேலாவது அதற் கான நடவடிக்கையை மேற்கொள்ளுமா?